# கல்விசார் பொதுஅறிவு

சி.நவநீதன் (SLEAS)

**பின்வரும் வினாக்களை நன்கு வாசித்து மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்க**

01. பாடசாலை அபிவிருத்திச்சங்க கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் நிர்வாக குழுவின் உத்தியோகபூர்வ பெயர் யாது?

1) பாடசாலை அபிவிருத்தி குழு
2) பாடசாலை அபிவிருத்தி சங்கம்
3) பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு
4) பாடசாலை முகாமைத்துவ குழு

02. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பதவிகளை அல்லது வேறு குழுக்களின் பதவிகளை இரத்து செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?

A. குறித்த பதவி வகிக்கும் உறுப்பினர் மரணமடைதல்
B. தொடர்ச்சியாக முன்னறிவித்தலின்றி இரு கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருத்தல்
C. குறித்த உறுப்பினரின் பிள்ளை பாடசாலையிலிருந்து விலகுதல்
D. குறித்த உறுப்பினர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக தண்டிக்கப்படல்)

1)A,B,C,D 2) A,B,C 3) A,C,D 4) B,C,D

03. பாடசாலையொன்றில் தூரநோக்கு வேண்டிய அம்சங்கள்

A. சாதகமானதாக இருத்தல் வேண்டும்(Positive)
B. எதிர்காலத்தை நோக்கிய ஒன்றாக அமைத்தல் வேண்டும்(Futuristic)
C. ஊக்கப்பாடு கொண்டதாக அமைத்தல் வேண்டும்(Motivation)
D. இறுதி அடைவு ஒன்றை அடையக்கூடியதாக அமைத்தல் வேண்டும் (End Rusult)

1) A மட்டும் 2) A உம் C உம் 3) B அல்லது D 4) மேற்கூறிய எல்லாம்

04. பாடசாலையொன்றின் பணிக்கூற்று பின்வருவனவற்றுள் எதை கொண்டிருக்க கூடாது

1) சமூகப்பொறுப்பு
2) ஒழுக்க கோவை
3) பாடசாலையின் குறிக்கோள்
4) பாடசாலை போசகர்களின் அபிலாசை

05. STEAM Education தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது/சரியானவை ?

A-இது ஒரு ஒன்றிணைந்த கற்றல் அணுகுமுறையாகும்
B- STEM Education இன் மற்றொரு மேம்பட்ட நிலையாகும்
C - விஞ்ஞானம் .தொழினுட்பம் பொறியியல் ,கணிதம் ஆகியவற்றுடன் கலை உள்ளீர்க்கப்பட்டு STEAM என அழைக்கப்படுகின்றது
D - இது ஒரு எழுதப்பட்ட கலைத்திட்டமாகும்

1) A,B 2) B,C 3) A,B,C 4) A,B,C,D

06. 1972 ம் ஆண்டு கல்வி சீர்திருத்தத்திற்கு பின்விசைகளாக அமைந்திராத காரணியாக கொள்ளப்படக்கூடியது

1) படித்த இளைஞர்களிடம் நிலவிய வேலையின்மை பிரச்சினை
2) இடதுசாரிகள் ஆட்சியில் இடம்பெற்றமை
3) கல்வியில் தொடர்ந்துகொண்டிருந்த குடியேற்றவாத எச்சங்கள் கண்டிப்புக்குள்ளாக்கியமை
4) குடியேற்றவாத நாடுகளின் வழிகாட்டல்

07. அரசியலமைப்பின் 13 ம் திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமல்லாதது

1) கல்விக்கொள்கையாக்கம்
2) பாடசாலை மேற்பார்வை
3) ஆசிரியர் இடமாற்றம்
4) ஒழுக்காற்று நடவடிக்கை.

08. பல்கலைக்கழகங்களுக்கு வளர்முக நாட்டிலிருந்து மாணவர்களை அனுமதித்தல் போன்ற செயற்பாடுகள்

1) கல்வியினூடாக சமுகமாற்றத்தை ஏற்படுத்தல்
2) கல்வியை முதலீட்டு செயன்முறையாக நடைமுறைப்படுத்தல்
3) சமூக மாற்றங்களுக்கேற்ப கலைத்திட்டத்தை மாற்றுதல்
4) சமூக மாற்றங்களுக்கு ஏற்றவகையில் கல்வியை வகுத்தல் (......)

09. கல்வியை பெறுவதற்கு அனைத்து பிள்ளைகளுக்கும் உரிமையுள்ளது.குறைந்தபட்சம் ஆரம்பக்கல்வியை கட்டாயமாக்குவதுடன் அதனை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பது

1) கட்டாயக்கல்வி கல்வி சட்டத்தின் 18 ம் உறுப்புரை
2) சிறுவர் சமவாயத்தின் 28ம் உறுப்புரை
3) அரசியலமைப்பின் 13ம் திருத்தம்
4) யுனெஸ்கோ பிரகடனம்

10. பாடசாலை பண்புத்தர சுட்டியை (SEQI) கணிப்பிடும்போது மதிப்பிடப்படும் மதிப்பீட்டு துறைகள் எத்தனை

1).9 2).8 3) 64 4) 7

11. புதிய கல்வி சீர்திருத்தங்களின் அடிப்படையில் 2026 ம் ஆண்டுக்கான பாடசாலை மொடியுல் தயாரித்து வெளியிடுவதில் கல்வி வெளியீட்டு திணைக்களத்துடன் வேலைப்பகிர்வை மேற்கொண்டுள்ள நிறுவனம் எது ?

1) கல்வியமைச்சு
2) தேசிய கல்வி ஆணைக்குழு
3) அரச அச்சககூட்டுத்தாபனம்
4) தேசிய கல்வி நிறுவகம்

IQ NN VICTORY
S.NAVANEETHAN 0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

12. பாடசாலை பண்புத்தர சுட்டியை (SEQI) கணிப்பிடும்போது மதிப்பிடப்படும் மதிப்பிட்டு துறைகள் எத்தனை ?

1).9 2).8 3) 64 4) 7 (.......)

13. வினைத்திறன் தொடர்பான கூற்றுக்களில் பிழையானது

1)வளங்களை உச்சமாக பயன்படுத்துதல்

2)விடயங்களை சரியாக செய்தல்

3)உள்ளீடுகளுடன் தொடர்புடையது

4)வெளியீடுகளுடன் தொடர்புடையது (.......)

14. "தொழிற்பிரவேசம்" 13 வருட உத்தரவாத கல்வி வேலைத்திட்டத்தின் இலக்கல்லாதது

1)அறிவு திறன் மனப்பாங்கு அபிவிருத்தி

2)தொழினுட்ப தொழில்முறை மற்றும் சமூகத்திறன் மேம்பாடு

3)சுய அபிமானம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி.

4)பெறுபேறுகள் மற்றும் மதிப்பிடல் அபிவிருத்தி (......)

15. பொதுக்கல்வி மறுசீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் உள்ளடங்காத விடய பரப்பு

1) வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம்

2) பாடசாலைமட்ட தொழில்சார் ஆசிரிய அபிவிருத்தி

3)13 வருட உத்தரவாத கல்வி வேலைத்திட்டம்

4) கல்வியின் பண்புத்தர மேம்பாடு (.....)

16. பங்கேற்பு முகாமைத்துவத்தின் அனுகூலமல்லாதது

1) உற்பத்தி அதிகரிக்கும்

2) ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படுவர்

3) தீர்மானமெடுத்தல் விரைவுபடுத்தப்படும்

4) செலவு விரயம் குறையும் (.....)

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

17. இன்றைய கல்வியின் நோக்கமல்லாதது

1) தேசிய ஒருங்கிணைப்பு 2) தனியாள் அபிவிருத்தி

3) பொருளாதார அபிவிருத்தி 4) தனியார் அபிவிருத்தி (.....)

18. இன ,மொழி,மத,குல,சமூக அந்தஸ்துகளை கருதாது கல்வி வழங்கும் கொள்கை என்ற கருத்தை விளக்கும் சொற்பிரயோகம்?

1) நியாயமான சந்தர்ப்பம் வழங்குதல்

2) சமமான சந்தர்ப்பம் வழங்குதல்

3) கட்டாயமாக சந்தர்ப்பம் வழங்குதல்

4) அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் (.....)

19. கல்வி வெள்ளை அறிக்கை வெளிவந்த ஆண்டுகளை கொண்ட தொகுதி
1) 1948,1972,1997
2) 1950,1966,1981
3) 1991,1997,2003
4) 1999,2005,2015 (.....)

20. கல்வியின் புதிய போக்குகளாக குறிப்பிடக்கூடியது
1) திறந்த பாடசாலைகள்
2) இணையவழி நிகழ்நிலை கற்றல்
3) நிலைமாற்று ஆசிரியர் வகிபாகம்
4) மேற்கூறிய எல்லாம் (.....)

21. தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி ஒருவர் தொடர்ச்சியாக பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராக பதவி வகிக்கக்கூடிய காலம்
1) 2 வருடங்கள் 2) 4 வருடங்கள்
3) 3 வருடங்கள் 4) 1 வருடம் (....)

22. கல்வி குறிக்கோள்களை தயாரிக்கும் போது செல்வாக்கு செலுத்தக்கூடாத விடயம்
1) தத்துவ கருத்துக்கள் 2)தேசிய தேவைகள்
3) வேலையுலகின் கேள்வி 4)அரசியல் தேவை (....)

23. 2007 ஆம் ஆண்டின் கலைத்திட்ட சீர்திருத்தத்தினுள் காணக்கூடிய விசேட இயல்பு
1) தேர்ச்சிகளை அடிப்படையாக கொண்ட கல்வி முறைமை
2) கற்றற்பேறுகளை அடிப்படையாக கொண்ட கல்வி முறைமை
3) குறிக்கோள்களை அடிப்படையாக கொண்ட கல்வி முறைமை
4) பாடத்திடடத்தின் கட்ட்டமைப்பு மாற்றம் (.....)

IQ NN VICTORY S.NAVANEETHAN 0773942964

24. பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வை செயன்முறையை வலுப்படுத்தவும் சிநேகப்பூர்வமாக்கவும் சம்பந்தப்பட்டோரின் வகைக்கூறலை அதிகரிக்கவும் சிகிச்சைமுறை மேற்பார்வை பொருத்தமானது.அதனுடாக கட்டியெழுப்பப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படும் கோட்பாடு ?
1) நாம்-நாம் 2) நான்-நான்- 3) நீ-நான் 4) நாம்-நான் (.....)

25. குடியேற்ற கால கல்விமுறை பற்றிய சரியான கூற்று
1) கட்டாய கல்விக்கான சந்தர்ப்பங்கள்
2) சகல கல்வி நிறுவனங்களும் மதகுருமார்களால் நிர்வகிக்கப்பட்டமை
3) உள்நாட்ட்டவரின் தேவையைவிட மேலைத்தேயத்தினரின் தேவைக்கேற்ற கல்வி நடைமுறை
4) ஆசிரிய கல்வி நடைமுறைப்படுத்துவதில் பாரிஸ் பாடசாலைகள் முக்கிய பங்கு (.....)

26. சமயோசிதமாக மனிதர்களை நடத்தி செல்லுதல் என்பது
1) விளைதிறன் 2) தலைமைத்துவம்
3) முகாமைத்துவம் 4) தந்திரோபாயம் (......)

27. பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி என்ற இலக்கை அடைய இலங்கை கலைத்திட்டத்தில் உள்வாங்கப்படுள்ள மாற்றமல்லாதது

1) பதின்முன்று வருட உத்தரவாத கல்வி
2) க.பொ .த(உ /த ) தொழினுட்ப பிரிவு
3) கலைத்திட்டத்தில் தொழிற்பாடங்கள் உள்வாங்கப்பட்டமை
4) கிராமங்களின் தன்மைக்கேற்ற பாடங்களை கற்பிக்க கூடியவாறு நெகிழ்வு தன்மையான பாடத்திட்டம் (....)

28. 1981 ம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு பின்னணிக்காரணியாக குறிப்பிட முடியாத விடயம்

1) போகோட பிரேமரத்ன தலைமையின் கீழ் செயற்பட்ட கல்வி சீர்திருத்த அறிக்கை
2) வைத்திய கலாநிதி ஞானலிங்கம் தலைமையின் கீழ் செயற்பட்ட தொழில் கல்விக்கான அறிக்கை
3) H.D.சுஹாதபால தலைமையின் கீழ் செயற்பட்ட தேசிய பயிலுனருக்கான பயிற்சி பற்றிய அறிக்கை
4) பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையின் கீழ் செயற்பட்ட தேசிய நல்லிணக்கத்துக்கான அறிக்கை (.....)

29. மாணவர்களின் கற்றல் விளைவுமட்டத்தை(Learning outcomes) அளவீடு செய்வதற்காக சர்வதேச மட்டத்தில் செய்யப்படும் பிரதான மதிப்பீடுகள் இரண்டை குறிப்பிடுக

A – TIMSS B – Olympiad c – PISA D – CIMA

1) A,B 2) B,C 3) A,C 4) C,D

30. கொழும்பு பல்கலைக்கழக தேசிய கல்வி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு மையம்(NEREC) கல்வியமைச்சுடன் இணைந்து எந்தெந்த தரங்களின் கற்றல் அடைவு மட்டத்தை தேசிய மதிப்பீட்டுக்கு உட்படுத்துகின்றது

1) தரம் 2,4 2) தரம் 1,3 3) தரம் 4,8 4) தரம் 5,11

S NAVANEETHAN 0773942964 வேகம் + விவேகம் = வெற்றி VICTORY IQ NN

31. பாடசாலை மட்ட கணிப்பீடு தொடர்பான சரியான கூற்று

5) மாணவர்கள் சித்தியடைவார்களா இல்லையா என்பது தொடர்பான மதிப்பீடாகும் .
6) மதிப்பிடும் சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் மதிப்பீட்டு முறையாகும்.
7) கற்றலையும் கற்பித்தலையும் விருத்தி செய்வதற்காள மேற்கொள்ளப்படும் தலையீடாகும்.
8) மாணவர் செயலடைவு தொடர்பான நம்பகமான மதிப்பீட்டு முறையாகும்.

32. பேண்தகு அபிவிருத்தியினடிப்படையிலான செயலொழுங்கல்லாதது

1) மனித வளங்களை பயிற்றுவித்தல்
2) பொதுமக்களை அறிவூட்டலும் விழிப்புணர்வூட்டலும்
3) சுய திறன் விருத்தியை போன்று ஒழுக்கம்,பங்குபற்றல்,தீர்மானமெடுத்தல் திறன்களை விருத்தி செய்வதற்கான வாய்ப்பை அடிப்படை கல்வியில் உறுதிப்படுத்தல்.
4) முடிவுறும் வளங்களை முழுமையாக பயன்படுத்தலும் வளங்களை தேவைக்கேற்ப இறக்குமதி செய்தலும்

33. இருபத்தியோராம் நூற்றாண்டின் கல்வி 4.0 கவனம் செலுத்தும் துறையல்லாதது

A. திறன் தொழினுட்பம் (Smart technologies)

B. செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence)

C. ரோபோட்டிக்ஸ் (Robotics)

D. மென்திறன்கள் (Softskills )

1)A 2)B 3)A,C 4)A,B,C,D

34. பொதுக்கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் (GEMP) தொடர்பான கூற்றுகளில் சரியானது/சரியானவை

A. 2018-2026 காலப்பகுதியில் முன்னெடுக்கப்படுகின்றது

B. உலகவங்கியின் நிதி அனுசரணை

C. பாடசாலை அடிப்படையிலான கற்றல் ஊக்குவிப்பு வழங்கல் (SBLEG ) இனுடாக நிதி வழங்கப்படும்

D. ஆங்கிலம்,கணிதம்,உட்படுத்தல் கல்வி,SBPTD,பாடசாலை சுகாதார மேம்பாடு போன்றவற்றை முன்னிறுத்துகின்றது

E. கல்வியின் பண்புத்தர உறுதி வலியுறுத்தப்படுகின்றது

1)A 2) B 3)A,E` 4)எல்லாம் சரி

35. 2010 ம் ஆண்டிற்கு பின் பாடசாலை கல்வித்துறையினுள் முன்னெடுக்கப்பட்ட மாற்றமல்லாதது

1) 13 வருட உத்தரவாத கல்வி ஆரம்பிக்கப்பட்டமை

2) க.பொ.த (உ /த ) பாடத்துறையினுள் தொழினுட்ப பிரிவு சேர்க்கப்பட்டமை

3) மஹிந்தோதய ஆய்வுகூடம் அமைக்கப்பட்டமை

4) தொழினுட்ப பீடம் அமைக்கப்பட்டமை

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
விவேகம் = வெற்றி

36. ஒரு பாடசாலையின் மகுடவாக்கியம்

1)பாடசாலை கலாசாரத்தை பிரதிபலிக்கும்

2).பாடசாலையின் நோக்கத்தை பிரதிபலிக்கும்

3)பாடசாலையின் பெறுபேறுகளை பிரதிபலிக்கும்

4) கல்வியமைச்சின் நோக்கத்தை பிரதிபலிக்கும்

37. 2027 ம் ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பில் வலியுறுத்தப்படும் கற்றல் திறன்கள் மூன்றையும் சரியாக காட்டும் தொகுதி

1) உற்பத்தித்திறன் ,ஆரம்பக்கற்றல், தகவல்

2) ஊடகம்,தொழினுட்பம் , கற்றல்

3) தகவல், ஊடகம்,தொழினுட்பம்

4) ஆரம்பக்கற்றல், தகவல் ,ஊடகம்

38.பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான உறவினை சிறப்பாக வலுப்படுத்துவதற்கு காணப்படவேண்டிய ஆரோக்கியமான நிலைமையொன்றை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க

1) சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு அலகாக பாடசாலை காணப்படல்
2) சமூகம் பாடசாலையினதும் பாடசாலை சமூகத்தினதும் தேவைகளை பூர்த்தி செய்தல்
3) பாடசாலை சமூகத்தின் ஒரு அங்கமாக செயற்படல்
4) முழுச்சமூகத்தினதும் உப அலகாக பாடசாலை செயற்படல்

39. கல்வியில் சமவாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக அண்மைக்காலங்களில் அரசால் முன்னெடுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள்

A - சுரக்சா | B - 13 வருட உத்தரவாத கல்வி
C - இலவச மதிய உணவு | D - இலவச பாதணி

1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும் 4) A,B,C,D எல்லாம் (.......)

40. “ஆசிரியர்கள் அனைவரையும் பட்டதாரியாக்கல்” என்ற இலக்குடன் முன்னெடுக்கப்படும் முன்மொழிவுகளில் பொருத்தமில்லாதது

1) தேசிய கல்வி நிறுவகத்தை சுயாதீன (ஆசிரியர்) பல்கலைக்கழகமாக்குதல்
2) தேசிய கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழக வளாகங்களாக தரமுயர்த்துதல்
3) தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்று வெளியேறுவோருக்கு கல்விமாணி பட்டம் வழங்குதல்
4) தனியார் நிறுவனங்களினுடாக பட்டங்களை வழங்குதல் (....)

41. இருபத்தியோராம் நூற்றாண்டின் கல்வி 4.0 என்பது

1)இணையத்தின் வெகுஜன ஊடுருவலால் உருவான கல்வி
2)தொழினுட்ப பயன்பாடு இல்லாத கல்வி
3)நான்காவது தொழில்துறை புரட்சியுடன் தன்னை இணைத்துக்கொள்ளும் கல்வி
4)ஆசிரியர் கல்வி (....)

S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

42. அல்பா பரம்பரை பற்றிய கூற்றுக்களில் பிழையானது

A. Generation - Z இற்கு பிந்திய பரம்பரை
B. 2010-2025 இற்கு இடையில் பிறந்தவர்களை உள்ளடக்கியது
C. அல்பா தலைமுறையுடனான சவால்களில் மிகப்பெரியது தொழினுட்பத்தின் முழு வாய்ப்பும் அதன் விளைவாக தொலைதூர கல்வியும் ஆகும்
D. நிகழ்நிலை வகுப்புகள், youTube இலிருந்து அறிவை பெறக்கூடியதாகவுள்ளதால் நேரடிவகுப்பை கேள்விக்குரியதாக்கும் பெற்றோர் மற்றும் மாணவ சமூகத்தை கொண்டது
E. ஆசிரியர்களின் நேரடி வகுப்புகளின் முக்கியத்தை வலியுறுத்தும் பரம்பரை

1) A 2)D 3)E 4)B (.....)

43. க.பொ.த (சா /த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் சுபஹ புலமைப்பரிசில் உள்ளடக்கும் துறையல்லாதது

1)புத்தாக்க செயற்பாடுகள் | 2)விளையாட்டு செயற்பாடுகள்
3)அழகியல் செயற்பாடுகள் | 4)கல்வி செயற்பாடுகள் (....)

44. SESIP திட்டத்தினுள் உள்ளடங்கும் பாடமல்லாதது

1) மொழி 2)கணிதம் 3) விஞ்ஞானம் 4)தொழினுட்பம் (...)

45. இலங்கை கல்வித்துறையில் அண்மையில் உருவாக்கப்பட்ட சேவை ?

1) இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை
2) இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை
3) இலங்கை கல்வி நிர்வாக சேவை
4) இலங்கை அதிபர் சேவை (....)

46. ஆசிரிய மத்திய நிலையங்கள் தற்போது எவ்வாறு பெயர்மாற்றப்பட்டுள்ளன ?

1) ஆசிரிய வாண்மை நிலையங்கள்
2) ஆசிரிய வாண்மைவிருத்தி வள நிலையம்
3) ஆசிரிய வாண்மைவிருத்தி நிலையம்
4) அக்ரஹானிய ஆசிரிய மத்திய நிலையம் (...)

47. ஆசிரியர்களுக்கான தொடருறு கல்வியை வழங்கும் நிலையமல்லாதது

1)தேசிய கல்வி நிறுவகம் 2)ஆசிரிய மத்திய நிலையம்
3)திறந்த பல்கலைக்கழகம் 4)கல்வியியற் கல்லூரி (....)

48. பாடசாலைகளில் உள்வாரி,வெளிவாரி மதிப்பீடுகளில் இனங்கண்ட பலவீனங்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மைவிருத்தி (SBPTD)யினூடாக முன்னெடுக்கப்படும் செயற்பாடாக கருதமுடியாதது

1)செயல்நிலை ஆய்வு 2)பிரதிபலிப்பு செயற்பாடுகள்
3)தரவட்டம் 4)நிலையறி பரீட்சை (...)

49. GEMP,SESIP வேலைத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் முறையே

1) சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி
2) யுனிசெவ் , உலகவங்கி
3) உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி
4) சீன வங்கி, உலகவங்கி (...)

50. தாய்மொழியில் கற்பிக்கவேண்டிய பாடங்கள்

1)மொழியும் சமயமும் 2)தமிழும் கணிதமும்
3)விஞ்ஞானமும் சுகாதாரமும் 4)குடியியலும் புவியியலும் (....)

51. பட்டதாரி நியமன ஆசிரியரொருவர் 3-1(A ) தரத்திலிருந்து தரம் 2 இற்கு பதவியுயர்வு பெற எடுக்கும் காலம்

1) 3 ஆண்டுகள் 2) 5 ஆண்டுகள்
3) 7 ஆண்டுகள் 4) 2 ஆண்டுகள் (....)

IQ NN VICTORY S.NAVANEETHAN 0773942964

52. தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மாற்றம்

1)விரும்பிய மாணவர் மட்டும் தோற்றலாம்

2)விடைத்தெரிவுகளின் எண்ணிக்கை மூன்றாக குறைக்கப்பட்டமை

3)வினாத்தாளுக்கான நேரம் அதிகரிக்கப்பட்டமை

4)பகுதி 2 வினாத்தாளை முதலில் வழங்கியமை (....)

53. இலங்கையில் மாணவரொருவர் முறைசார் பாடசாலைக்கல்வியை தொடரக்கூடிய வருடங்களின் எண்ணிக்கை யாது

1) 11 வருடங்கள் 2) 10 வருடங்கள்

3) 12 வருடங்கள் 4) 13 வருடங்கள் (....)

54. பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சையொன்றில் விண்ணப்பதாரர் எதிர்கொள்ளவேண்டிய பரீட்சைகள்

A - எழுத்துப்பரீட்சை

B - பொது நேர்முகப் பரீட்சை

C - பாடசாலை சார்ந்த பரீட்சை

D -செயன்முறைப் பரீட்சை

1) A,B,C 2)B,C,D 3)A,C.D 4)A,B,D (....)

55. அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாட்டை வலுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளது

A - மதிய உணவு வழங்குதல்

B - இலவச காப்புறுதி வழங்குதல்

C - இலவச சீருடை வழங்குதல்

D - இலவச பாடநூல் வழங்குதல்

இவை வழங்கப்பட்ட சரியான ஒழுங்கை காட்டும் விடை

1)A,B,C,D 2)D.C.A.B 3)A,C,D,B 4)D,C,B,A(....)

IQ NN VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

56. இலங்கையில் அதிகளவு பட்டதாரிகள்

1)விஞ்ஞான பட்டதாரிகள்

2)கலைப் பட்டதாரிகள்

3)வணிக பட்டதாரிகள்

4)தொழினுட்ப பட்டதாரிகள் (....)

57. 2013ம் ஆண்டு உயர்தர பாடசேர்மானங்களில் தொழினுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட்டது எத்துறையில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவாகும்?

1)கணிதம் 2) உயிரியல் 3)கலை 4)வணிகம் (...)

58. ஆசிரியர் ஒருவருக்கான வருடாந்த அமைய லீவு.மருத்துவ லீவுகளின் எண்ணிக்கை முறையே

1) 20,21 நாட்கள் 2) 24,20 நாட்கள்

3) 21,24 நாட்கள் 4) 21,20 நாட்கள் (....)

59. இலங்கையில் சர்வதேச பாடசாலைகள் இந்நிறுவனத்தின் கீழ் பதிவுசெய்யப்படுகின்றன ?
1)கல்வியமைச்சு
2)மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
3)இலங்கை முதலீட்டு சபை
4)வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் (.....)

60. 2020,2021 COVID-19 காலத்தில் பாடசாலைகளை நடத்தமுடியாதிருந்தபோது அரசால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் கூடுதலான மாணவர் பயனடைந்த செயற்பாடு
1)நிகழ்நிலை வகுப்புகளை நடத்துதல்
2)பரீட்சைகளை பிற்போடுதல்
3)இறுதிப்பரீட்சை வினாத்தாள்களை இலகுவாக்கல்
4)தேசிய தொலைக்காட்சியினுடாக பாடங்களை கற்பித்தல் (....)

61. இலங்கையில் மிக இளம்வயதில் கல்வியமைச்சராக கடமையாற்றியவர்
1) C.W.W.கன்னங்கரா 2)அகிலவிராஜ் காரியவசம்
3) ரணில் விக்கிரமசிங்க 4)நாமல் ராஜபக்ச (....)

62. எந்த கல்வியமைச்சருடைய காலப்பகுதியில் இலங்கை ஆசிரியசேவை ஸ்தாபிக்கப்பட்டது
1)ரிச்சட் பத்திரன 2) பந்துல குணவர்த்தன
3)பதியுதீன் 4)ரணில் விக்கிரமசிங்க (....)

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

63. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகையல்லாதது
1)லீவு 2)இலவச புகையிரத ஆணைச்சீட்டு
3)சம்பளவுயர்வு 4)புலமைப்பரிசில் (....)

64. அரச ஊழியர்களின் நலன் பேணுவதற்காக வழங்கப்படும் காப்புறுதியின் பெயர்
1)சுரக்ஸா 2)குருசெத 3)அக்ரஹார 4)உபஹார (....)

65. நவீன சீனாவின் கல்வி மறுமலர்ச்சியில் [பெரும்பங்காற்றியவர்
1)ஜூலியஸ் நியாயரே 2)லீ குவாங் யூ
3)மா ஓ சேதுங் 4)மகாத்மா காந்தி (...)

66. தற்கால கல்விமுறையில் உலகளவில் முன்னிலை வகிக்கும் நாடு
1)மாலைதீவு 2)சிங்கப்பூர் 3)வடகொரியா 4) பின்லாந்து (....)

67. இலங்கை பாடசாலை மாணவர்களிடம் இனங்காணப்பட்டுள்ள பிரதான குறைபாடு
1)மந்த போசணை 2)அதிகரித்த உடற்பருமன்
3)நீரிழிவு 4)இரத்தசோகை (....)

68. பரீட்சை வினாத்தாளொன்றை தயாரிக்கும்போது பயன்படுத்தப்படுவது

1)ஆசிரியர் வழிகாட்டி | 2) பாட புத்தகம்
3) விடயத்திறன் அட்டவணை | 4)கடந்தகால வினாத்தாள் (....)

69. கற்றற்பேறுகள் என்பதால் கருதப்படுவது?

1)கற்றல் கற்பித்தல் செயன்முறையினூடாக அறிவு ரீதியாக கிடைப்பது
2)கற்றல் கற்பித்தல் செயன்முறையினூடாக மாணவர்கள் பெறுகின்ற அனுபவங்கள்
3)கற்றல் கற்பித்தல் செயன்முறையினூடாக மாணவர்கள் பெறுகின்ற பரீட்சை பெறுபேறுகள்
4)கற்றல் கற்பித்தல் செயன்முறையினூடாக மாணவர்கள் பெறுகின்ற உள இயக்கத்திறன்கள் (....)

70. ஆசிரிய சேவையை வாண்மைத்துவ சேவையாக்கும் நோக்குடன் இலங்கை கல்விப்புலத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம்

1) வினைத்திறன் தடைதாண்டலுக்கான இத வடிவம்
2) சம்பள அதிகரிப்பு
3) மூடிய சேவையாக்கியமை
4) போட்டிப்பரீட்சை மூலம் ஆசிரிய நியமனம் (....)

71. A - நவோதய பாடசாலைகள்

B - 1000 பாடசாலைகள் திட்டம்
C - 1000 தேசியபாடசாலைகள்
D - அண்மையிலுள்ள பாடசாலை சிறந்தபாடசாலை
E - தேசிய பாடசாலை,மாகாண பாடசாலைகள்

மேற்படி செயற்றிட்ட்ங்கள் அமுலாகிய கால ஒழுங்கு

1)A,B,C,D,E 2) E,A,B,D,C 3)C,D,E,A,B 4)E,D,C,B,A (...)

VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

72. பதின்மூன்று வருட உத்தரவாத கல்விக்குரிய நிலையல்லாதது

1)பொதுத்துறை | 2)பிரயோகத்துறை
3)தொழிற்பயிற்சி | 4)ஆய்வுத்துறை (....)

73. பதின்மூன்று வருட உத்தரவாத கல்வியை பயிலும் மாணவனொருவனுக்கு நிறுவனம்சார் தொழிற்பயிற்சிக்காலத்தில் நாளொன்றுக்கு வழங்கப்படும் அதிகபட்ச உதவித்தொகை ரூபாயில்

1) 100 2) 200 3) 500 4) 1000 (....)

74. தேசிய ஒருமைப்பாட்டை நோக்கமாக கொண்டு இலங்கை கல்வியினுள் புகுத்தப்பட்டுள்ள எண்ணக்கரு அல்லாதது

1)பல்கலாசார கல்வி | 2)சமாதான கல்வி
3)இருமொழிமூல கல்வி | 4)அனர்த்த கல்வி (....)

75. ரூஸோவின் பிள்ளை வளர்ச்சி பருவங்களில் 2 தொடக்கம் 12 வயது வரையான பிள்ளைப்பருவத்தில் வலியுறுத்தப்படும் நேரடி அனுபவத்தை பெற வழிகாட்டிடவேண்டும் என்பதை செயற்படுத்த பொருத்தமான செயற்பாடு

1) வரலாறு புத்தகத்தை வாசித்தல்
2) பெருக்கல் வாய்ப்பாட்டை மனனம் செய்தல்
3) மூலிகை தோட்டத்திற்கு அழைத்து செல்லல்
4) கிறிக்கற் போட்டியொன்றின் நேர்முக வர்ணனை ஒலிபரப்பை கேட்க செய்தல் (...)

76. தற்போது எமது பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பிலும் தொடர்ச்சியை பேணக்கூடியவாறு கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இவ்வாறு நெடுக்கு வெட்டுமுக அமைப்பிலான கலைத்திட்டம் எவ்வாறு அழைக்கப்படும்?

1) தேர்ச்சி மைய கலைத்திட்டம்
2) மாணவர் மைய கலைத்திட்டம்
3) சுழல் ஏணி கலைத்திட்டம்
4) பரீட்சை மைய கலைத்திட்டம் (....)

77. 1990 ம் ஆண்டு தாய்லாந்தின் ஜொம்ரியன் நகரில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானம்

1) அனைவருக்கும் கல்வி
2) அனைவருக்கும் புகலிடம்
3) அனைவருக்கும் உணவு
4) அனைவருக்கும் நீதி

78. டக்கரில் நடைபெற்ற உலக கல்வி மாநாடு இடம்பெற்ற ஆண்டு

1) 1990
2) 2000
3) 2010
4) 2020

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964

79. பல்கலைக்கழக அனுமதிக்கு 2000 ஆண்டிலிருந்து உயர்தர பரீட்சையுடன் நடத்தப்படும் இப்பரீட்சையில் 30 புள்ளிகளையாவது பெற்றிருக்க வேண்டும்.அப்பரீட்சையின் பெயர்

1) சாதாரண பரீட்சை
2) பொது உளச்சார்பு
3) பொது சாதாரண
4) பொது அறிவும் உளச்சார்பும்

80. 2015 இல் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்டமாற்றத்தின்கீழ் முதலாவது மாற்றம் இவ்வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட்து ?

1) தரம்1,2
2) தரம்6,7
3) தரம்10,11
4) தரம்6,10

81. க.பொ .த (சா /த ) பரீட்சையில் பாடசாலை பரீட்சார்த்தி ஒருவர் தோற்றக்கூடிய ஆகக்கூடிய பாடங்களின் எண்ணிக்கை

1) 5
2) 6
3) 9
4) 10

82. மாகாணங்களுக்கு கல்வியதிகாரங்கள் அரசியலமைப்பின் எத்தனையாம் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட்து

1) 20ம் திருத்தம்
2) 21ம் திருத்தம்
3) 13ம் திருத்தம்
4) 1ம் திருத்தம்

83. 13 வருட உத்தரவாத கல்வி முறை அறிமுகப்படுத்தியதன் நோக்கம்

1) பல்கலைக்கழக அனுமதியை இலகுபடுத்தல்
2) சாதாரண தரம் சித்தியடையாத மாணவர்களை பாடசாலை கட்ட்டமைப்புக்குள் தொடர்ந்து கற்க வாய்ப்பளித்தல்
3) உயர்தர கல்வியை தரப்படுத்தல்
4) மேற்கூறிய எல்லாம் (......)

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

84. சுரக்ச காப்புறுதியின்கீழ் மாணவனொருவன் பெறக்கூடிய அனுகூலமல்லாதது

1)பெற்றோரின் இறப்புக்கு குடும்பத்திலுள்ள ஒவ்வொரு மாணவனுக்கும் இழப்பீடு
2)ஆகக்கூடிய இழப்பீட்டு தொகை 1 500 000 ரூபா
3)மருத்துவமனையில் சிகிச்சை பெற்றால் இழப்பீடு
4)மாதாந்தம் நிலையான தொகை வைப்பிலிடப்படும் (....)

85. கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்துதல் தொடர்பான கீழுள்ள கூற்றுக்களையே அவதானித்து மிகச்சரியான கூற்றுக்களை கொண்ட தொகுதியை குறிப்பிடுக

A - கற்கும் பாடவிடயங்களை நன்றாக கிரகிக்க முடிதல்
B - குறித்த காலப்பகுதியில் பாடவிதானத்தை பூர்த்தி செய்யகூடியதாயிருக்கும்
C - தொடர்ச்சியாக ஊக்கலை பேண முடிதல்
D - புதிய விடயங்களை இலகுவாக விளங்கப்படுத்தக்கூடியதாயிருத்தல்

1)A,B ஆகியன சரி 2)C,D ஆகியன சரி
3)B,C,D ஆகியன சரி 4)எல்லாக்கூற்றும் சரி (...)

86. வாய்மொழிமூலமல்லாத தொடர்பாடலினூடாக முன்னெடுக்கப்படும் அம்சமல்லாதது
1)மனவெழுச்சிகளையும் மனப்பாங்குகளையும் வெளிக்காட்டல்
2)வாய்மொழி தொடர்பாடலினூடாக முன்னெடுக்கப்படும் அதே கருமத்தையாற்றுதல்
3)வாய்மொழிமூல தொடர்பாடலை வலிமைப்படுத்தல் அல்லது நலிவடைய செய்தல்
4)வாய்மொழிமூல தொடர்பாடலின் அவசியத்தை வலியுறுத்தல் (.......)

87. மாணவரின் அறிவு,திறன்,மனப்பாங்கு,ஆளிடைத்தொடர்புகள் ,சமூகத்திறன்கள், ஆளுமைக்கூறுகளில் ஏற்படும் கூட்டான திரட்சி .................... என அழைக்கப்படும்.வெற்றிடத்தில் வரக்கூடிய பொருத்தமான சொல்
1)ஆளுமை 2)கற்றல்பேறு 3)தேர்ச்சி 4)சித்தி (....)

88. சிறந்த வினாவுதல் நுட்பமாக கருதப்படக்கூடியது
1) பாடத்தை படிப்படியாக நகர்த்தக்கூடியவாறு வினாக்களை தொடுத்தல்
2) பெயர் சொல்லி அழைத்து வினாவை தொடுத்தல்
3) குறிப்பிட்ட மாணவரை மாத்திரம் வினாவுதல்
4) வினாவுக்கு பல விடைகள் பெறக்கூடியவாறு வினாவுதல் (......)

89. அறிவு என்பதை ஒரு புத்தகத்தினுள் அடக்கிவிடமுடியாது .என்னுடைய சிந்தனைகள் ஒரு புத்தகத்தினுள் மட்டும் அடக்கிவிடக்கூடியதல்ல என்று கூறிய தத்துவவியலாளர் யார்?
1)பிளேட்டோ 2)சோக்கிரட்டிஸ்
3)அரிஷ்டோட்டில் 4)அலெக்ஸாண்டர் (.....)

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

90. சனத்தொகையின் உப குழுவாகிய வயதுவந்தோர் மற்றும் பிள்ளைகளுக்காக முறைசரிந்த கல்விக்கு புறம்பாக தெரிவு செய்யப்பட்ட யாதேனுமொரு கற்றலை விசேடமாக வழங்குவதற்கு நடைமுறைப்படுத்தப்படும் முறைமைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பின் கல்வி செயற்பாடுகள் அனைத்தும்
1)முறைசார் கல்வி 2)முறையில் கல்வி
3)முறைசாரா கல்வி 4)தனியார் கல்வி (......)

91. A - பிளேட்டோ - லைசியம்
B - அரிஸ்டோட்டில் - அக்கடமி
C - ஜூலியஸ் நியாறரே - கிங்கோணி
D - தாகூர் - சர்வபள்ளி
மேற்படி தொடர்புகளுள் சரியானது
1) A 2) B 3) C 4) D (.....)

92. வயதுக்கேற்ப நாளொன்றில் வேலை செய்வதுடன் கற்றலானது ஒன்றிணைந்ததாக இருக்க வேண்டுமென வலியுறுத்திய கல்வியியலாளர்
1) கார்ல் ரோஜர்ஸ் 2)பிளேட்டோ 3)கார்ல் மார்க்ஸ் 4)காந்தி (....)

93. "அன்பார்ந்த ஆசிரியரே! உமது பாடசாலை ஒரு வைத்தியசாலையாகும் .அதன் சிறப்பு யாதெனில் ஆரோக்கியமானவர்களை வைத்துக்கொண்டு நோயாளிகளை வெளியேற்றல் ஆகும்" என்ற கூற்றினூடாக வெளிப்படுவது

1) பாடசாலைகள் நல்ல சமூக பிரஜைகளை உருவாக்குவதில் பங்களிக்கின்றன
2) பாடசாலைகளில் திறமையாளர்களை உருவாக்குகின்றன
3) பாடசாலைகள் கற்றலில் இடர்ப்படுவோரை பரீட்சைமூலம் வெளியேற்றுகின்றன
4)பாடசாலைகள் பரிகார கற்பித்தலில் ஈடுபட்டு எல்லோரையும் கற்றல் இயலுமையுடையவர்களாக்குகின்றன (......)

94. பேண்தகு அபிவிருத்தி என்ற எண்ணக்கரு இன்று உலகளவில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.அந்தவகையில் பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டிய துறையல்லாதது

1) இயற்கை வளங்கள்
2) சூழல் மாசடைதல்
3) மனிதவள முகாமைத்துவம்
4) விண்வெளி ஆய்வு (......)

95. சமூகமயமாக்கல் நுட்பமுறைகளில் ஒன்றான தண்டனை இன்று பெருமளவில் தவிர்க்கப்பட வேண்டுமென மனிதவுரிமையாளர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.ஆயினும் கீழைத்தேய கலாசாரத்தில் தண்டனை ஆரோக்கியமான சமூகமயமாக்கல் நுட்பமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை மறுதலிக்க முடியாது.அவ்வாறு ஆரோக்கியமான நுட்பமாக பயன்படுத்தப்படாத சந்தர்ப்பமாக அமைவது பின்வருவனவற்றுள் எது ?

1) பிழையான நடத்தைகளை சுட்டிக்காட்டுதல்
2) ஏனையவர்களை கொண்டு எச்சரித்தல்
3) சமய விடயங்களில் வழிப்படுத்தல்
4) கடுமையான உடலியல் வலி ஏற்படுத்தும் வேலைகளில் ஈடுபடுத்தல் (.....)

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

96. இலங்கையில் கல்வியில் வீண் விரயம் ஏற்படும் சந்தர்ப்பமாக குறிப்பிட முடியாதது

1) அனைவருக்கும் கல்வி வழங்கல்
2) மாணவர் இடைவிலகல்
3) பரீட்சையில் சித்தியடையமை,
4) கல்வி கற்றும் வேலைவாய்ப்பின்றி இருப்போர் (....)

97. 13ம் திருத்த சட்டத்தின் கீழ் மாகாணத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரமல்லாதது

1)மேற்பார்வை 2)இடமாற்றம்
3)ஒழுக்காற்று நடவடிக்கை 4).கலைத்திட்ட வடிவமைப்பு (....)

98. மானுடப்பாய என்ற நூலை எழுதிய கல்வியமைச்சர்

1)I.M.R.A.ஈரியகொல்லே 2)பதியுதீன்
3)E.A.தஹநாயக்க 4)C.W.W.கன்னங்கரா (....)

99. "நவீன உலகில் மாணவர் எதிர்கொள்ளும் சவால்கள்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுமாறு கேட்கப்படுவது?

1).புறவய வினா | 2)அகவய வினா
3).குறைபுறவய வினா | 4).திறந்த வினா (....)

100. எந்த செயற்றிட்டத்தினதும் காலவரையறையை குறிக்க பயன்படுவது?

1)காண்ட் வரைபடம்(gantt chart) | 2)பை வரைபு
3)எண்ணக்கரு வரைபடம் | 4)பாய்ச்சற்கோட்டு படம் (....)

101. யுனெஸ்கோவின் கல்விக்கான 4 தூண்களில் அண்மைக்காலமாக வலியுத்தப்படும் பிரதான கருப்பொருள் எது?

1) அறிவதற்காக கற்றல்(Learning to Know)
2) செய்வதற்காக கற்றல் (Learning to Do)
3) வாழக்கற்றல் (Learning to De)
4) இணைந்துவாழக்கற்றல் (Learning to Live Together) (...)

102. பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பயன்படுத்தப்படும் z -score முறைக்கு மாற்றீடாக முன்வைக்கப்பட்டுள்ள முறை

1)மொத்த புள்ளி அடிப்படையிலான தரவரிசை
2)பாடசாலை ரீதியிலான அனுமதி
3)மாவட்ட ரீதியிலான அனுமதி
4)தேசிய ரீதியிலான அனுமதி (....)

103. பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் தலைவராக அதிபரொருவர் பதவி வகிக்கக்கூடிய காலம் தொடர்பான சரியான கூற்று

1) 2 வருடங்கள்
2) 4 வருடங்கள்
3) ஆயுட்காலம் முழுவதும்
4) குறித்த பாடசாலையில் அதிபராக கடமையாற்றும் காலம் (....)

104. கல்வித்தொழினுட்பம் என்பது

1) கற்பித்தல் முறைகள் மற்றும் கற்றல் வளங்கள்
2) கற்றல் முறைகள் மற்றும் கற்பித்தல் முறைகள்
3) மேற்பார்வையும் கண்காணிப்பும்
4) கற்றலுக்கு தயாராதல் (....)

105. பொதுக்கல்வி நவீனமயமாக்கல் (GEMP) செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாக அமைவது

1)தேர்ச்சிமடட கல்வி
2)இணைப்பாடவிதான அபிவிருத்தி
3)தாய்மொழிக்கல்வி
4)கல்வியின் தர உறுதிப்பாடு (....)

VICTORY IQ NN S.NAVANEETHAN 0773942964 வேகம் + விவேகம் = வெற்றி

106. பாடசாலைக்கும் சமுகத்துக்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்துவதற்க்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம்

1) பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைவிருத்தி வேலைத்திட்டம்
2) வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம்
3) பொதுக்கல்வி நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம்
4) அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டம் (....)

107. அன்றாடம் கற்பித்தல் செயற்பாட்டில் எதிர்கொள்ளும் சவால்களை சுயமதிப்பீடு செய்வதற்காக ஆசிரியரொருவர் பேணக்கூடிய ஆவணம்

1)சம்பவத்திரட்டு புத்தகம் 2) பாடக்குறிப்பு
3)பிரதிபலிப்பு குறிப்பு 4)ஆசிரியர் வழிகாட்டி (....)

108. இலங்கையின் புராதன கல்வி நிறுவனங்களின் தன்மைக்கு அமைவாக அடிப்படை கல்வி ,இடைநிலைக்கல்வி,உயர்கல்வி என்பவற்றுக்காக தாபிக்கப்பட்டிருந்த நிறுவனங்களை ஒழுங்கே காட்டுவது ?

1)மகா பிரிவேனா ,பிரிவேனா,பன்சல
2)பிரிவேனா, மகா பிரிவேனா,பன்சல
3)பன்சல ,மகா பிரிவேனா ,பிரிவேனா
4)பன்சல,பிரிவேனா , மகா பிரிவேனா (....)

IQ NN
VICTORY
S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

109. மூலதனம் என்ற நூலை எழுதியவர்?

1)பிளேட்டோ 2)கார்ல் மார்க்ஸ் 3)டூயி 4)ஸ்கின்னர் (....)

110. இலவச பாடநூல் விநியோகம் ,புலமைப்பரிசில் வழங்குதல் ,பாடசாலை சீருடைக்கான துணிகளை வழங்குதல்,இலவச காப்புறுதி போன்ற செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கப்படும் கல்வி குறிக்கோள் யாது ?

1) ஏழை மாணவருக்கு உதவுதல்
2) கல்வியில் சம சந்தர்ப்பத்தை வழங்குதல்
3) கல்விக்கான போட்டித்தன்மையை குறைத்தல்
4) பாடசாலைகளுக்கிடையிலான போட்டித்தன்மையை நீக்குதல் (....)

111. பேண்தகு அபிவிருத்தியை நோக்கிய கல்வியின் தொழிற்பாட்டுக்கு பொருத்தமற்ற கூற்று

1) கல்வியினுடாக விழிப்புணர்வூட்டி சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை குறைத்தல்
2) மும்மொழித்திறமையுடைய ஆசிரிய, மாணவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல்
3) வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்தும் மனப்பாங்கினை கட்டியெழுப்புதல்
4) சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத விவசாயமுறைகளை அறிமுகப்படுத்தல் (....)

112. பாடசாலை ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்காக வழங்கப்படும் விருது ?

1.குருபிரதிபா 2. பிரபுதா வாசக 3.நவோதய 4.சுபக (...)

113. 13 ம் திருத்தத்துக்கமைய எத்தகைமையுடையோருக்கு மாகாணசபையால் ஆசிரியர் நியமனம் வழங்கமுடியும்?

1) பட்டதாரிகள் ,தொண்டர் ஆசிரியர்கள்
2) கல்வியியற்கல்லூரி போதனா தகைமையுடையோர், .பட்டதாரிகள்
3) கலைப்பட்டதாரிகள் கல்விமாணி பட்டதாரிகள்
4) கல்விமாணி பட்டதாரிகள் விஞ்ஞான பட்டதாரிகள் (....)

114. "சௌபாக்கியத்தின் எதிர்கால நோக்கு" என்ற கொளகைப்பிரகடனத்தின் பாடசாலைக்கல்வியின் நவோதயம் என்ற செயற்றிட்டத்தில் குறிப்பிடப்படாத வேலைத்திட்டம்

1) 1000 தேசிய பாடசாலைகளை தரமுயர்த்தல்
2) 20 பரிபூரண மும்மொழி இடைநிலை தேசிய பாடசாலைகளை தாபித்தல்
3) கேந்திர பாடசாலை வலையமைப்பை உருவாக்குதல்
4) விளையாட்டு பாடசாலைகளை இல்லாதொழித்தல் (...)

115. பல்வேறு காரணங்களால் முறையான பாடசாலை கல்வியை இழந்தவர்களுக்கு கட்டுப்பாடுகள் இன்றி கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் எண்ணக்கரு

1)நவில்ட் பாடசாலை 2)மும்மொழி பாடசாலை
3)திறந்த பாடசாலை 4)மூடிய பாடசாலை (...)

116. இலங்கையின் கல்வி மறுமலர்ச்சியில் செல்வாக்கு செலுத்திய சிறுபான்மை சமூகத்தை சார்ந்த கல்வியமைச்சர் யார்?

1)ராதாகிருஷ்ணன் 2)விஜயகலா
3)பதியுதீன் முகமட் 4)அகிலவிராஜ் (...)

117. இலங்கை பாடசாலை கட்ட்டமைப்பில் ஆரம்பப்பிரிவில் அமுல்படுத்தப்பட்ட முதன்மை நிலைகளில் அவதானிக்கக்கூடிய சிறப்பியல்பு?

1)ஒரே ஆசிரியர் ஒரு முதன்மைநிலைக்கு கற்பித்தல்.
2)கற்பித்தல் துணைச்சாதன பயன்பாடு
3)செயற்பாட்டினூடாக கல்வி
4)தேர்ச்சிமைய கல்வி (...)

118. கோவிட் -19 நோய்த்தொற்று பரவலால் மாணவர்களின் நலன்கருதி பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் பெரும்பாலான மாணவர்களின் கற்றல்செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்து..நாட்டின் நோய்த்தொற்று நிலைமையினால் மாணவர் இழந்த கல்வியை மீட்டெடுக்க முன்னெடுக்கப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சி

1.குருகெதர 2.குருதெனிய 3.குருவராய 4.குருசெத (....)

VICTORY S.NAVANEETHAN 0773942964 வேகம் + விவேகம் = வெற்றி

119. க.பொ.த(சா /த ) பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை பரீட்ச்சார்த்திகள் கருப்பாடங்கள்,தொகுதிப்பாடங்கள் என இருவகையான பாடங்களை கற்கவேண்டியுள்ளது .க.பொ .த (சா /த ) பரீட்சைக்கு மாணவனொருவன் தோற்றக்கூடிய கருப்பாடங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை

1. 10　　2. 9　　3. 8　　4. 6　　(...)

120. இலங்கையின் எழுத்தறிவு வீதம் உயர்வாக இருப்பதற்கு இலவச கல்வி முறைமையும் ஒரு காரணமாகும்.எனினும் இன்று இலவசக்கல்வி முறைமை பல சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.இலவச கல்விக்கு சவாலாக அமையக்கூடுமென எதிர்பார்க்கப்படுபவை?

1.சர்வதேச பாடசாலைகள்　　2.தேசிய பாடசாலைகள்

3.முன்பள்ளிகள்　　4.ஆரமப பாடசாலைகள்　　(....)

121. கட்டிளமைப்பருவ பிள்ளைகளிடம் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கி வந்தாலும் கூட பல ஆரோக்கியமான அம்சங்கள் எம் கண்ணுக்கு புலப்படுவதில்லை..கட்டிளமைப்பருவத்தினரிடம் காணப்படும் ஆரோக்கியமான விடயம்?

1.எதிர்பால் கவர்ச்சி　　2.உணர்ச்சிவசப்படல்

3.கவனக்கலைப்பங்களுக்கு அடிமையாதல்　　4. குழுவாதல்　　(...)

122. பாடசாலையில் திட்டமிடலில் பயன்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படும் அணுகுமுறை?

1.பங்கேற்பு முகாமைத்துவம்　　2.ஜனநாயக முகாமைத்துவம்

3.சர்வதிகார முகாமைத்துவம்　　4.சாணக்கிய முகாமைத்துவம்(...)

IQ NN
VICTORY

123. தேசியக்கல்வி இலக்குகள்,அடிப்படை கற்றல் தேர்ச்சிகளின் எண்ணிக்கைகள் முறையே

1) 9,5　　2) 7,5　　3)8,7　　4) 8,5　　(....)

S.NAVANEETHAN
0773942964
வேகம் + விவேகம் = வெற்றி

124. பரீட்சை திணைக்களம் பாடசாலைகளில் நடத்தும் பொதுப்பரீட்சைகளில் பயன்படுத்தும் NETS என்பது

1.தேசிய மதிப்பிடலுக்கான சேவை

2.தேசிய கல்வி பரீட்சை சேவை

3.தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை

4.தேசிய மதிப்பிடலுக்கும் கணிப்பிடலுக்குமான சேவை　　(...)

125. இல்ங்கையில் முதலாவது மத்திய மகாவித்தியாலயம் எங்கு அமைக்கப்பட்டது?

1) மகரகம　　2)காலி

3)அனுராதபுரம்　　4) மத்துகம　　(....)

126. மத்திய மகாவித்தியாலயங்கள் எத்தனை?

1) 1000　　2) 53　　3) 54　　4) 100　　(....)

127. தற்போது இலங்கையிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள் எத்தனை?

1) 373    2) 8    3) 19    4) 20    (....)

128. முதலாவதாக அமைக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி எது?

1)மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி

2) யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

3)சியன தேசிய கல்வியியற் கல்லூரி

4)தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி    (....)

